# C.S.I TAMIL CHURCH - OMAN

THAT THEY ALL MAY BE ONE

CHURCH OF SOUTH INDIA

# “பாலைவன மன்னா”




**மன்னா – 10** ஜூலை 2020 **பிரதி – 4**



# ஆயர் மடல்



கிறிஸ்துவில் பிரியமானவர்களே!

உன்மேல் என் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவேன் என்று மாறாத வாக்களித்த கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**திருச்சபை**

நமது திருச்சபையால் தாங்கப்பட்டு வரும் மிஷனெரிகளுக்காகவும், போதகர், செயற்குழு மற்றும் அனைத்து குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம். திருச்சபை சார்ந்த ஊழியங்களில் இணைந்து கொள்வோம். இணையதளம் வழியாகவும், அலைபேசி வழியாகவும் நேரடியாகவும் தொடர்பு கொள்ளும்போது உங்கள் ஜெபப் பங்களிப்பை தாராளமாக திருச்சபைக்குத்தர அன்பாய்க் கேட்கிறேன்.

**தேசம்**

ஓமான் தேசத்திற்காகவும், இந்திய தேசத்திற்காகவும் ஜெபிப்பது நல்லது. இந்திய தேச எல்லை பாதுகாப்புக்காகவும், இராணுவ வீரர்களின் உயிர் பாதுகாப்புக்காகவும் ஜெபித்துக்கொள்வோம். உயிரை தேசத்துக்காக தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்கள் ஆறுதல்பெற மன்றாடுவோம். எல்லை பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வு ஏற்பட இறைவேண்டல் செய்வோம்.

**Covid 19**

பெருந்தொற்று வியாதி விரைவாக பரவிவரும் தமிழகத்திற்காகவும், குறிப்பாக சென்னை, மதுரை பட்டணங்களை நினைவுகூர்ந்தும் ஜெபிப்போம். தினமும் காலை 9 மணி முதல் 10 மணி வரை திருச்சபை ஐக்கிய இறைவேண்டலில் இணைந்து கொள்வோம். அரசு எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்காகவும், மக்களின் பாதுகாப்புக்காகவும் தொற்றுவியாதிகள் முழுமையாக நீங்கவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

இப்புதிய மாதத்தில் பெரிய மாற்றம் நமது ஓமான் தேசத்தில் உருவாகவும், பொருளாதார வளர்ச்சி ஏற்படவும், திருச்சபை ஐக்கியம் வலுப்பெறவும், குடும்பங்களின் தேவைகள் சந்திக்கப்படவும், ஊதிய இழப்புகள் ஏற்ப்படாமல் இருக்கவும் அனைத்து ஆற்றலுமுடைய ஆண்டவர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# கண்கள்



இறை இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். மனித உடலில் கண்கள் என்று சொல்வது இல்லத்தின் ஜன்னல் போன்றது. ஜன்னல் வழியாக நாம் காண்கிறோம், சில நமக்கு தேவையுள்ளவை, சில நமக்கு தேவையற்றவை. அதை தெளிவாக காணும் கண்களே நமக்கு தேவை என்பது உண்மை. திருமறையினூடாக செல்லுவோமே என்றால் கர்த்தரின் கண்கள் நம்மை நோக்கியிருக்கிறது. அதே வேளையில் வெற்றி நிறைந்த வாழ்வு வாழ்ந்த மனிதர்களின் கண்கள் கர்த்தரை நோக்கி இருந்ததை புரிந்துகொள்ள முடிகிறது.

## கர்த்தரின் கண்கள்:-

கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது (நீதி. 15:3).

சாலமோன் ஞானி கர்த்தரின் கண்களைக் குறித்து இவ்வசனத்தில் குறிப்பிடும்போது கர்த்தரின் கண்களுக்கு மறைவானது இல்லை, எவ்விடத்திலுமிருந்து பார்க்கிறது; எல்லோரையும் பார்க்கிறது என்கிறார். மனித கண் போன்றது அல்ல என்பதை தெளிவுப்படுத்துகிறார்.


மனிதர்களைக் காண்பது மட்டுமல்ல, உபாகமம் 11:12-ல் தேசத்தை வருஷத்தின் துவக்கம் முதல் வருஷத்தின் முடிவு மட்டும் காண்கிறார் என்னும் செய்தி சொல்லப்படுகிறது.

நம்முடைய வழிகளை ஆண்டவர் காண்கிறார் என்று யோபு பக்தன் குறிப்பிடுகிறார். “அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது; அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார் (யோபு 34:21) என்றும் சங்கீதகாரராம் தாவீது கூறும்போது “கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரரை பார்க்கிறது. அவருடைய இமைகள் அவர்களை சோதித்து அறிகிறது” என்று சங்கீதம் 11:4-ல் குறிப்பிடுகிறார். மனுபுத்திரர்கள் இறைவனின் படைப்பு எனவே சோதித்து அறிகிற கர்த்தர் மனுஷனை காண்கிறவர் என்பதை வேதம் தெளிவுபடுத்தி நிற்கிறது.

மனுஷனுடைய வேண்டுதலையும் காண்கிறார் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். “உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தை கேட்கும்படிக்கு என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் நிறைந்திருப்பதாக” 1இரா. 8:29 கர்த்தரின் கண்கள் இரவும் பகலும் நம்மை காண்கிறது என்பதை உணர்ந்து கொள்வோம்.

பெற்றோர் கண்களை மறைக்கலாம், போதகர் கண்களை மறைக்கலாம், நண்பர்கள் கண்களை மறைக்கலாம், சகோதரர் கண்களை மறைக்கலாம், கணவன் மனைவி கண்களை, பிள்ளைகள் கண்களை மறைக்கலாம். ஆனால் கர்த்தரின் கண்களை மறைக்க இயலாது. அவர் நம் வெளியரங்கத்தை காண்கிறவர் மட்டுமல்ல, உள்ளத்தையும் அதன் நோக்கத்தையும் காண்கிறவர் என்பதை புரிந்து செயல்பட அழைக்கப்படுகின்றோம். அப்படியெனில் நம்முடைய கண்கள் எப்படி இருக்கவேண்டும் என தொடர்ந்து தியானிப்போம்.

### மனுஷனின் கண்கள்:-




“என் கண்கள் எப்பொழுதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது. அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கி விடுவார்” (சங்கீதம் 25:15).

நம்முடைய கண்கள் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்க வேண்டிய இரகசியம் என்னவென்றால் கால்கள் வலைக்கு நீங்கலாக்கப்படும் என தாவீது இராஜா குறிப்பிடுகிறார். உபாகமம் 24:7 கூறுகிறது மோசேயின் கண்கள் இருளடையவில்லை. காரணம் மோசே தனது கண்களை கர்த்தர் மீது பதித்திருந்தார்.

**“உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து உன் ஆத்துமாவை ஜாக்கிரதையாய் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும், உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்” (உபா. 4:10).**

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடம் தங்கள் கண்களைப் பதித்து வாழ்ந்ததினால் பெற்ற நன்மையை பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கூறப்படவேண்டும் என்பதை தெளிவுபடுத்தி அவ்வாறே அவர்களும் வாழவேண்டும் என அழைப்பதைக் காணமுடிகிறது.

இதைச் சங்கீதக்காரனாம் தாவீது 123-ம் சங்கீதம் 2-ம் வசனத்தில் “வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை கையை நோக்கியிருக்குமாப்போலவும் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கம் செய்யும் வரைக்கும் எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது” என்கிறார்.

நம்முடைய கண்கள் ஒருபோதும்,

i. இச்சையின் கண்களாக (பிரசங்கி 2:10)
ii. மேட்டிமையின் கண்களாக (ஏசாயா 2:11)
iii. மறைக்கப்பட்ட கண்களாக (லூக்கா 24:16)

இராதபடிக்கு கண்களை காத்துக்கொள்ளவேண்டும்.

“உம்முடைய இரட்சண்ணியத்தை என் கண்கள் கண்டது” (லூக். 2:32) என்ற சிமியோனைப்போல ஆண்டவருடைய இரட்சிப்பைக் காணும் அனுபவத்தோடு வாழ ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

நம்முடைய கண்களின் வெளிச்சம் எப்படியிருக்கவேண்டும் என்பதை புரிந்துகொள்ள ஒரு நிகழ்வு ஒன்றை கூறுகின்றேன்.

ஒருநாள் மாலை மயங்குகிற வேளையில் ஒரு சிறுவன் மிதிவண்டியில் சாலையில் சென்று கொண்டிருந்தான். அவன் வருவதை பார்த்த ஒரு போலீஸ்காரர் அவனது சைக்கிளை நிறுத்தி, தம்பி டைனமோ லைட்டை எரிய செய்யாமல் ஏன் சைக்கிளை ஓட்டி வருகிறாய்? உடனே அவன் இந்த சாலையின் இருபுறமும் அநேக விளக்குகள் எரிகின்றன. பட்டப்பகலைப்போல் வெளிச்சமாக உள்ளது. என் சைக்கிளில் வெளிச்சமில்லாதது குற்றமா? என்றான். இதைக்கேட்ட போலீஸ்காரர் அவனை சாலையின் ஒரு ஓரமாக அழைத்துச்சென்று அவனது சைக்கிளின்பின் சக்கரத்திலிருந்த காற்றை பிடுங்கிவிட்டார். காற்று எல்லா இடத்திலும்தான் உள்ளது. ஆனால் உன் சைக்கிளில் காற்று இல்லை என்றால் உன்னால் ஓட்டி செல்லமுடியுமா என்றார்? இந்த காரியம் சிறுவனை கோபமடைய செய்தாலும் சற்று நேரத்தில் அது அவனை சிந்திக்க வைத்தது.

ஆம் கிறிஸ்துவில் பிரியமானவர்களே! கர்த்தர் என்னை காண்கிறார் என்னும் உணர்வு நல்லதுதான். பிற மனிதர்கள் என்னை காண்கிறார்கள் என்னும் தூண்டுதல் சிறந்ததுதான். ஆனால் நான் என்ன காண்கிறேன்? என் பார்வை எப்படி இருக்கிறது? என்னில் சரிசெய்யவேண்டியவை எவை என தன்னை காணும் உணர்வும், தன்னை சரிசெய்யும் உணர்வும் ஒரு

மனிதனுக்கு உயர்வையும் மேன்மையையும், இறைத்திட்டத்தையும் காணச்செய்யும்.

“உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய் பார்க்கக்கடவது” (நீதிமொழிகள் 4:25)

அப்படியே வாழ்வோம். ஆசி நிறைவாய் பெறுவோம். ஆண்டவர்தாமே உங்களை வழிநடத்துவாராக.

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## ஓட்டபந்தயம்



ஒரு காட்டில் சிங்க ராஜாவின் பிறந்தநாள். எங்கும் அலங்காரங்கள் விழாக்கோலமாய் அமர்க்களப்பட்டது. ஆடல், பாடல், கலை நிகழ்ச்சிகள் என்று எங்கு பார்த்தாலும் கேளிக்கைகள், அதிகாலை முதலே விருந்து துவங்கி விட்டது. காட்டு மிருகங்கள் எல்லாமே குதூகலமாக திரிந்தன.

வழக்கமாய் சிங்க ராஜாவின் பிறந்தநாளில் இவையெல்லாம் நடப்பது வழக்கந்தான் என்றாலும், சிங்க ராஜா அதிகமாய் விரும்புவது அந்த நாளில் நடக்கும் ஓட்டப்பந்தயத்தைத்தான். ஒவ்வொரு ஆண்டிலும் முதல் பரிசு பெறுவது மான்தான். மிகுந்த கவனத்துடன் புயல்காற்றைப்போல ஓடி முதல்பரிசை வென்றுவிடும்.

இந்தமுறை ஒரு சிறப்பு பரிசை அறிவித்தது. முதல் பரிசு பெறுகிற மிருகத்துக்கு “ஓட்டத்தின் ராஜா” என்ற சிறப்புப் பெயரும் சூட்டி ஒரு கிரீடத்தையும் அணிவிக்கப்போவதாக அறிவித்தது.

இந்த அறிவிப்பைக் கேட்டதும் எல்லா மிருகங்களுக்குமே ஆசை வந்துவிட்டது. வருடா வருடம் மான் மட்டுமே ஜெயித்துக்கொண்டிருப்பதைக் கண்டு நரிக்கு வயிறெல்லாம் எரிந்தது. இந்த வருடமும் மான் ஜெயித்தால் கிரீடம், பட்டம் எல்லாம் அதற்கே சொந்தமாகிவிடும். நான் ஜெயிக்கிறேனோ இல்லையோ மான் தோற்கவேண்டும் என்று சதித்திட்டம் ஒன்றைத் தீட்டியது. கடந்த ஆண்டில் மானைத் தோற்கடிக்க அதன் ஓடு பாதையில் முள்ளைப் போட்டு வைத்துப் பார்த்தது. ஆனால் மானின் உறுதியான குளம்புகள்

முட்களையெல்லாம் நொறுக்கிவிட்டன. எனவே இம்முறை வேறொரு வகையில் யோசித்தது.

போட்டிக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று நரிக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது. உடனே ஓடிப்போய் தன் நண்பன் பாம்பை சந்தித்தது. பாம்பும் நரியைப்போலவே வஞ்சக புத்தி கொண்டதுதான். நரி பாம்பிடம் தனது திட்டத்தை விவரித்தது. பாம்பும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டது.

மான் போட்டிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இடத்துக்குப் பாம்பு சென்று மானிடம் பேச்சுக் கொடுத்தது. நண்பா வழக்கம்போல இந்த வருஷமும் நீதான் ஜெயிக்கப்போற. ராஜா கொடுக்கப்போகிற பரிசு இந்த வருஷமும் உனக்குத்தான் என்றது. மானுக்கு சந்தோஷம் ‘‘நன்றி நண்பா’’ என்றது. பாம்பு சொன்னது, ஒவ்வொரு வருஷமும் நீ ஓடுற அழகைப் பாக்குறதுக்காகவே வந்துடுவேன். காலே தரைல படாம, காத்துல பறக்குற மாதிரி நீ ஓடுற ஓட்டம் இருக்கே! அதுக்கே ஒரு தனிப்பரிசு கொடுக்கணும். ஒட்டகசிவிங்கி ஓடும் பாரு, பப்பரப்பான்னு காலைப் பரப்பிக்கிட்டு, கழுதை ஓடுறதைப் பாரேன் கொஞ்ச நேரத்துக்கு ஒரு தடவை தலையைத் தூக்கி காள் காள்னு கத்திகிட்டு, யானை பத்தி சொல்லவே வேண்டாம், நாலு பேரு ஓடவேண்டிய இடத்துல அது மட்டுமே ஆட்டிகிட்டு ஓடிக்கிட்டு கிடக்கும். உன்னை மாதிரி விதிமுறையை மதிச்சு அழகாக யாருமே ஓடுறதே இல்லை. நீ வேணா கவனிச்சு பாரேன், சரி நண்பா, போட்டி ஆரம்பிக்கப்போகுது வாழ்த்துக்கள் என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது. மானுக்கு ரொம்ப பெருமையாக இருந்ததுடன், புதிய செய்தியாகவும் இருந்தது. பாம்பு சொன்ன மாதிரி மத்த மிருகங்கள் எப்படி ஓடுதுன்னு பாக்கணும் என்று நினைத்துக்கொண்டது.

பந்தயம் துவங்குவதற்கான மணி ஒலித்தது. மின்னலைப் போலவும், வில்லில் இருந்து புறப்படும் அம்பு போலவும் மிருகங்கள் பாய்ந்து ஓடின. மானும் தன்னுடைய வழக்கமான வேகத்தை ஆரம்பித்தது. சிறிது நேரம் ஓடியபின் பாம்பு சொன்னது நினைவுக்கு வந்தது. சொல்லி வைத்தாற்போல அதற்கு இந்தப் பக்கம் காண்டாமிருகமும், அந்தப்பக்கம் ஒட்டகச்சிவிங்கியும் ஓடிக்கொண்டிருந்தன.

பாம்பு சொன்னது சரிதான். இரண்டுமே ஓடுவது ஒரு ஒழுங்கே இல்லாமல் வேடிக்கையாகத்தான் இருந்தது. சற்றுத் தொலைவில் கழுதையும் கண்ணில் பட்டது. அதுவும் பாம்பு சொல்லியிருந்தபடியே அவ்வப்போது கனைத்தபடியேதான் ஓடிக்கொண்டிருந்தது. மானுக்கு இவற்றையெல்லாம் பார்த்து அடக்கமுடியாத சிரிப்பு வந்துவிட்டது.

இப்போது மான் ஓடிக்கொண்டிருந்த எல்லா மிருகங்களையும் நோட்டமிட்டது. எதுவுமே ஒழுங்காகவே ஓடவில்லை. திடீரென்று மானுக்கு தான் ஓட்டத்தில் பின்தங்கி இருக்கிறோமென்ற உணர்வு வந்தது. பதறியடித்து வேகத்தை துரிதப்படுத்தியது. அதற்குள் சிறுத்தை வெற்றி இலக்கை எட்டிவிட்டது.

மானுக்குக் கண்கள் எல்லாம் இருண்டுவிட்டது. இத்தனை வருடமாய்க் காத்து வந்த வெற்றிக்கோப்பை பறிப்போய்விட்டது. அத்துடன் இந்த ஆண்டில் சிறப்பாய்க் கிடைக்கவேண்டிய கிரீடமும், விருதும்கூட போய்விட்டன. பாம்போட பேச்சைக்கேட்டு மத்தவங்க எப்படி ஓடுறாங்கன்னு பாத்து இப்ப என்னோட ஓட்டத்துல தோத்துப்போயிட்டேனே என்று அழுதபடி அவமானம் தாங்காமல் அந்த இடத்தை விட்டே ஓடிப்போனது.

செல்லமே! மற்றவர்களின் ஓட்டத்தை விமர்சிக்க ஆரம்பித்துவிட்டால் நமக்கான ஓட்டத்தில் தோற்றுப்போவோம். இந்த காலங்களில் சத்துரு இந்த உத்தியைத்தான் கையாண்டு நல்ல ஓட்டக்காரர்களையும் விழத்தள்ளிவிடுகிறான்.


சகோதரரே நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள். இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார் (யாக்கோபு 5:9).

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## கர்த்தரே மெய்யான தெய்வம் இதைக்கண்ட மக்கள்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! நம்முடைய கண்கள் கர்த்தர் மீது பதிக்கப்பட வேண்டும். நமது வாழ்வில் அவருடைய அற்புதங்களைக் கண்டு வாழவேண்டும் என ஆண்டவர் விரும்புகின்றார். அப்படி என்றால் விசுவாசக் கண்கள் திறக்கப்படவேண்டும் என்றால் நம்மைக் கொண்டும் உலகில், திருச்சபையில், குடும்பத்தில், நம் வாழ்வில் பெரிய காரியங்களை கர்த்தர் செய்வார்.




ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது முகங்குப்புற விழுந்து கர்த்தரே தெய்வம் என்றார்கள் (1இராஜாக்கள் 18:39).

கிறிஸ்தவ வரலாற்றில் வாட்ச்மேன்நீ என்னும் அற்புத ஊழியரை அறியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. அவர் சீனாவில் ஆயிரக்கணக்கான வீட்டுச் சபைகளை நிறுவும்படி கடினமான பாதையில் ஊழியம் செய்தவர். ஒரு சமயம் மேஹ்வா என்னும் தீவில் கர்த்தருடைய ஊழியத்தை வைராக்கியமாய் செய்து வந்தார்.

அத்தீவின் கிராம மக்கள் ஜனவரி 11-ம் தேதி தாங்கள் வழிபடும் கடவுளுக்கு பெரிய பண்டிகை கொண்டாடுவது வழக்கம். இந்த கிராம மக்கள் மிகுந்த பெருமையுடன் கடந்த 286 வருடங்களாக இந்த பண்டிகை நாளில் மழை பெய்ததில்லை என வாட்ச்மேனிடம் கூறினர். அப்போது அவருடன் வந்திருந்த சக ஊழியரான கியோசிங் லீ என்ற வாலிபன் சற்றும் தாமதியாமல் நான் உறுதியாகக் கூறுகிறேன். எங்கள் தேவனே உண்மையான தேவன்; அவர் இந்த ஜனவரி 11-ம் நாள் மழை வரச் செய்வார் என சவால் விடுத்தார். அதற்கு அந்த தீவு மக்களும் அப்படி மழை பெய்தால் நாங்கள் அனைவரும் இயேசுவே தெய்வம் என்று ஏற்றுக்கொள்கிறோம் என்றனர். கியோசிங் பேச்சைக் கேட்ட வாட்ச்மேன்நீ சற்றே திகைத்தார். ஏன் தேவையில்லாமல் இப்படி வம்பில் மாட்டிக்கொள்ளவேண்டும் என மனதில் சற்று தடுமாறினாலும் மனதை தளரவிடாமல் தைரியத்துடன் ஜெபிக்க ஆரம்பித்தார். தகப்பனே நாங்கள் எங்கள் எல்லையை மிஞ்சிவிட்டோமோ என்று எண்ணுகிறோம். ஆனாலும் உம்முடைய நாமத்திற்கு நீரே மகிமையை வரப்பண்ணும் எனக் குழுவாக கூடி ஜெபித்தனர். ஜனவரி 11-ம் தேதியும் வந்தது. காலை தொடங்கி மதியம் வரை நல்ல மழை பெய்தது. கிராமத் தலைவரும், கிராம மக்களும் ஊழியர்களிடம் வந்து, பண்டிகை நாளைத் தவறாக மாற்றி சொல்லிவிட்டோம். எங்களுக்கு பண்டிகை நாள் ஜனவரி 14-ம் தேதி தான். அன்று மழை பெய்தால் பார்க்கலாம் என்று கூறினர்.

மீண்டும் தொடர்ச்சியாக வாட்ச்மேன்நீ-யும் மற்றவர்களும் ஊக்கமாக ஜெபித்தார்கள். ஜனவரி 14-ம் தேதியும் கடுமையான காற்றுடன் மழை பெய்தது. அதனைக் கண்ட அந்த கிராமமே மனமாற்றமடைந்து கர்த்தரே தெய்வம் என்று ஏற்றுக்கொண்டது. பின்பு அங்கு ஒரு திருச்சபையும் நிறுவப்பட்டது.

## எலியா தீர்க்கதரிசியால் கர்த்தரே தெய்வம் எனக் கண்ட மக்கள்:-

ஒருநாள் எலியா தீர்க்கதரிசி கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போய் பாகால்களை வணங்கின இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாகவும், பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு முன்பாகவும் கர்த்தரே தேவன் என்று முழக்கமிட்டு நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி

கூப்பிடுங்கள். நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன். அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்.



அதன்படி தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி அதை ஆயத்தம்பண்ணி பாகாலே எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலை தொடங்கி மத்தியானம் மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை. மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். பதில் கொடுக்காத, கொடுக்க முடியாத தேவர்களை பார்த்து நாள் முழுவதும் கூப்பிட்டும் அவர்களுக்கு எந்த பதிலும் வரவில்லை.

அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே தீர்க்கதரிசியாகிய எலியா வந்து ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்த காரியங்களையெல்லாம் இந்த வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்று எலியா தீர்க்கதரிசி சுருக்கமான, ஆனால் கருத்துள்ள ஒரு ஜெபத்தை செய்தபோது, கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்த சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்தது. வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

பிரியமானவர்களே! நாம் மறுபடியும் நம் தேவனே உண்மையான தெய்வம் என்று நிரூபிக்கும் கூட்டத்திற்கு வந்திருக்கிறோம். எலியாவின் தேவன் எங்கே என்று கேட்டு, விசுவாசத்தில் விரக்தி அடைந்தவர்களாக இந்த நாட்களில், அற்புதம் எங்கே நடைபெற போகிறது என்று அலுத்துப் போனவர்கள் உண்டு. அற்புதம் செய்யும் கர்த்தர் இன்றும் ஜீவிக்கிறார். ஆனால் நாம் ஒரு எலியாவைப்போல ஒரு வாட்ச்மேன்நீ-யைப் போல எழும்பினால் நம்மைக் கொண்டு தாம் ஒருவரே உண்மையுள்ள தேவன் என்று நிரூபிக்க கர்த்தரும் காத்திருக்கிறார்.

ஆனால் நாம் எலியாவைப் போலவும் வாட்ச்மேன்நீ-யைப் போலவும் கருத்துள்ள ஜெபத்தையும், விசுவாசத்தையும் உடையவர்களாக மாறாவிட்டால் இப்போதிருக்கிற சூழ்நிலையில் விழுந்துப்போவோம். கர்த்தருடைய வார்த்தையையும், அவரே உண்மையான தெய்வம் என்பதையும் நாம் ஆணித்தரமாக உலகிற்கு வெளிக்காட்ட முடியும். நம்முடைய கண்களை கர்த்தரிடம் பதிப்போம். கர்த்தர் நமக்கு தரும் விசுவாச வாழ்வைக் காண்போம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள்
## சார்லஸ் தெ ஃபூக்கோ

### உபசரிப்பில் மகிழ்ச்சி


மண்ணில் : 15-09-1858

விண்ணில் : 01-12-1916

ஊர் : ஸ்ட்ராஸ்பூர்க்

நாடு : பிரான்ஸ்

தரிசன பூமி : அல்ஜீரியா



தனிமையான தியான வாழ்வில் எனது துறவை ஆரம்பித்த நான் என்னையும் அறியாமல் பிறர் பணியில் மூழ்கியிருக்கக் கண்டு வியப்படைந்தேன். தினமும் இரவு உணவு உண்ணும் சமயத்தில் விருந்தினர் வருகின்றனர். தங்க இடம் கேட்கின்றனர். காலையுணவு நேரத்திலும் விருந்தினர்... இதற்கு முடிவேயில்லை.

சில நாட்களில் இரவிலும் பத்து பதினொரு விருந்தினர் வந்து கூடி விடுகின்றனர். தினமும் அறுபது முதல் நூறு வரை என்னைப் பார்க்க வருகின்றனர். எனது இல்லத்திற்கு காலை 5 மணி முதல் 8 மணி வரை, மாலை 4 மணி முதல் 8 மணி வரை மக்கள் வந்து செல்வதால் அது ஒரு தேன்கூடு போல் தோற்றமளிக்கிறது - இது சார்லஸ் ∴பூக்கோவின் வார்த்தைகள்.

யார் இவர்? பிரான்ஸ் நாட்டில் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்த ∴பூக்கோ, கிறிஸ்துவின் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்து துறவியானார். புனித பூமிக்குத் திருப்பயணம் மேற்க்கொண்ட இவர், இயேசுவைப்போல் வாழ ஆசை கொண்டார். 1901-ம் ஆண்டு தன்

மிஷனெரிப் பயணத்தை அல்ஜீரியாவை நோக்கி ஆரம்பித்தார். துவாரெக் மக்களின் நலனுக்காக கோவில் ஒன்றினை அமைத்து அதன் உச்சியில் ஒரு சிலுவையை நாட்டினார். இதுவே அந்நாட்டின் முதல் திருச்சபை.

நாடோடியாக வாழ்ந்த துவாரெக் மக்களுக்கு அவர்கள் மொழியிலேயே நற்செய்தியைக் கூறி, மக்களின் வாழ்வை நிலைப்படுத்தினார். துறவு மடத்தையும் ஆரம்பித்தார். தியானங்களையும் எழுத ஆரம்பித்தார்.

“ஏழைகளின் துணிகளையும் சலவை செய்துகொடு, அவர்கள் தங்கியிருக்கும் இடத்தை சுத்தம் செய். கூடுமானவரை இவற்றையெல்லாம் நீயே செய். பொது கழிவறைகளையும் நீயே கழுவு. பணி செய்யவே வந்தேன் என்ற இயேசுவைப் பின்பற்றி நீ ஒரு பணியாளனாகவே இரு.” என்று கூறிய சார்லஸ் தெ.்.பூக்கோ, தன் வாழ்நாளெல்லாம் பணியாளனாகவே வாழ்ந்து “இயேசுவின் சிறிய சகோதரர்கள்” என்ற அமைப்பை உலகிற்கு தந்து உன்னதரிடம் சென்றார்.

அன்பரே! பிறர்க்குப் பணி செய்வதில் உங்கள் செயல்கள் எப்படி உள்ளது?

**வாழ்விருந்து வாழ்வுக்கு :-** இயேசுவின் துன்பத்தில் பங்கு கொண்டால்தான் அவரது இன்பத்தில் பங்குகொள்ள முடியும் - சார்லஸ் தெ.்.பூக்கோ

**குயவனின் கரங்களில் :-** ஆண்டவரே! பிறரை உபசரிப்பதில் மகிழ்ச்சி காண எனக்கு உதவி செய்யும்.

**தியானத்திற்கு : 1சாமுவேல் 14, ஏசாயா 58, மத்தேயு 1-2**

## துக்கம் பகிர்வோம்

## கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mr. George அவர்களின் தாயார் Mrs. E. Ammal அவர்கள் ஜுன் மாதம் 22-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## நிகழ்வும் பாடமும்

மனிதன் தோன்றும் முன் மரம் தோன்றிற்று!
மரம் நமக்கு அண்ணன்! அண்ணனை பழிக்காதீர்கள்!
வெட்டி நட்டால் கிளை மரமாக வளரும்!
கரம் வெட்டி நட்டால் மனிதனாக வளருமா?
மரத்திற்கு வழுக்கை விழும் இலை உதிர்வதினால்! ஆனால் மறுபடியும் முளைக்கும்
மனிதனின் முடி விழுந்தாலும், உயிர் பிரிந்தாலும் ஒன்றே என்று அறிக!



மனிதனின் முதல் நண்பன் மரம்!
மரத்தின் முதல் எதிரி மனிதன்!
ஆயுதங்களை மனிதன் மிக அதிகமாக பிரயோகித்தது மரங்களுக்கு எதிராகத்தான்!
மரங்கள் இல்லையேல் மண்ணின்மீது ஏதப்பா ஏரி?
பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் மரங்கள் தரும் உத்திரவாதம் மனிதர்கள் நாம் தர முடியுமா?
உண்ண கனி, ஒதுங்க நிழல், அடைய குடில், அடைக்க கதவு, தடவ தைலம், தாளிக்க எண்ணெய், உடலுக்கு மருந்து, உணர்வுக்கு விருந்து மரம்தான்! மரம்தான் எல்லாம் மரம்தான்! மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்!



பிறந்தோம் தொட்டில் மரத்தின் உபயம்!
நடந்தோம் நடைவண்டி மரத்தின் உபயம்!
துயின்றோம் கட்டில் மரத்தின் உபயம்!
மணந்தோம் மாலை சந்தன மரத்தின் உபயம்!
எழுதினோம் எழுதுகோல், காகிதம் மரத்தின் உபயம்!
செத்துப்போனோம் சவப்பெட்டியும்கூட மரத்தின் உபயம்!
மரம்தான்! மரம்தான் எல்லாம் மரம்தான்!
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்!

# இருளிலிருந்து ஒளியை நோக்கும் கண்கள்




இந்த விண்ணுலகமும், மண்ணுலகமும் இறைவனின் படைப்பாகும். மண்ணுலகு உருவமற்று வெறுமையாயிருந்தது. அதன் ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது (ஆதி. 1:1,2). இறைவன் ஒளியைப் படைத்து மண்ணுலகை ஒழுங்குபடுத்தினார். வெறுமையான மண்ணுலகு பயன்படும்படி இறைவனால் புதுப்பிக்கப்பட்டது. இருளின் செயல்பாடுகளும், ஆக்கக்கூறுகளும் படைப்பிலிருந்தே வெளிப்படுகின்றன. அவை வெறுமை ஒழுங்கற்ற நிலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. தீமையான இருளின் ஆதிக்கத்தால் மனிதவாழ்வின் எதிர்கால நோக்கு சிதைபடுகிறது. மனுக்குலம் சுயத்தின் தன்மையால் பிடிக்கப்பட்டு, வாழ்வின் நோக்கம் இழந்து நிற்கின்றது. எனவே வாழ்வின் மெய்த்தன்மையை இழந்து நிற்பவர் மெய்வாழ்வு காண "நானே உலகின் ஒளி" என்றார் இயேசு கிறிஸ்து. இவ்வாறு இயேசு கிறிஸ்துவால் மெய்வாழ்வு பெற்று அகக்கண் திறந்தவர்கள் பிறரை இருளிலிருந்து ஒளிக்கு நேராய் நடத்துகிறவராய் மாற்றம் பெறுகின்றார்கள்.

## 1. இருளின் செயல்கள்:-

இருள் திடீர் தோற்றமல்ல. இவ்வுலகு உண்டானபோதே இருள் இருந்தது. இருள் மண்ணுலகின் ஆழத்திலிருந்தது. இவ்விருளின் ஆதிக்க விளைவே ஒழுங்கற்ற மற்றும் வெறுமையான நிலைகள் (ஆதி. 1:1-3) இருளின் ஆதிக்கத்தன்மையால் இறைவன் சொன்ன அறிவுரையை மீறி கீழ்ப்படியாமையினால் உறவுகள் சிதைக்கப்பட்டன. எனவே மனிதவாழ்வில் பயம், எரிச்சல், பழிவாங்குதல், கொலை, சுரண்டல், சாபம், தண்டனை என்பவை ஏற்படுத்தப்படுகின்றன. இவையும் இருளின் தன்மையின் பிரதிபலிப்பே. இருள் குழப்பத்தின் ஆக்கக்கூறு. இவற்றால் சீரழிவு, தீமை உருவாகின்றன. ஏசாயா 5:30-ன்படி இருள் பேரிடரை குறிக்கிறது. ஏசாயா 13:10-ன்படி உலகின் அழிவின்போது கதிரவன் இருண்டுபோகும்.

எகிப்தியரை துன்புறுத்த இறைவன் அனுப்பிய கொள்ளைநோய்களில் இருளும் ஒன்றே. எனவே இருள் சூழ்ந்த நாள் அருகில் உள்ளது எனக் கூறுகிறார் யோபு (யோபு 15:23). இருளின் ஆதிக்கத்தால் விளைவது

தோல்வி, அடிமை நிலை, அடக்குமுறை. இறைவனின் இறுதித்தீர்ப்பில் அகக்கண்கள் திறக்கப்படாத பாவிகள் இருளினுள் தள்ளப்படுவர். இறுதித்தீர்ப்பில் தோன்றும் பேரழிவு இருள் எனக் காணலாம். இருள் தீய நெறி உடையது. இதனால் பலனற்ற செயல்கள் வெளிப்படுகின்றன. இன்றைய இனவெறி, சமயவெறி, தீவிரவாதம், ஆதிக்கத்தன்மை, படைப்பை மாசுபடச்செய்தல், அணு ஆயுதச் செயல்பாடுகள். அனைத்தும் இருளின் பிரதிபலிப்பே. எனவே எபேசியர் 6:12-ன்படி இவ்வுலகு இருளின் ஆதிக்கப்பிடியிலிருக்கிறது. இந்த ஆதிக்கத்திலிருந்து இந்த உலகை மீட்க நாம் அழைக்கப்படுகிறோம்.

## 2. ஒளியின் செயல்கள்:-

ஒளி இறைவனின் படைப்பு (ஆதி. 1:3). ஒளியான இறைவனின் சில ஆக்கக்கூறுகளை வெளிப்படுத்தும் அடையாளம். இருளை அகற்ற பயன்படுத்தப்பட்ட ஆயுதம். ஒளியானது பயத்தை மாற்றி தைரியத்தை தருகிறது. ஒளியின் உதவியால் நாம் வாழும் உலகின் தீமையான ஒழுக்கமற்ற செயல்பாடுகளை அறிந்து அதை சரிசெய்ய முடிகிறது. ஒளி என்பதற்கு **"மெய்யறிவு"** எனவும் அர்த்தமுண்டு. ஒளியாகிய கிறிஸ்துவின் வழி மெய்யறிவைப் பெற்றவர் வாழ்வின் உண்மைநிலையின் ஆதிக்கத்திற்குச் செல்வார்கள். கோணலானவைகள் செவ்வைப்படவேண்டும் (ஏசா. 40:3,4). கிறிஸ்துவாகிய ஒளியால் மனிதவாழ்வில் வெளிப்படும் மாமிச கிரியைகளின் பண்புகள் மாற்றம் பெறுகின்றன. கிறிஸ்துவிடமிருந்து பெற்ற ஒளி ஐக்கியம், சத்தியம், ஒப்புரவு இவைகளில் ஒன்றித்து செயல்பட தூண்டுகிறது. பாவ வாழ்விலிருந்து மீட்பின் தன்மைக்கு நேராய் வழிநடத்துகின்றது. இன்று மனிதநேயம் மற்றும் உறவுகளை சிதைக்கும் பொருளாதார, கலாச்சார, அரசியல் சமய சீர்கேடுகளை நீக்கி நம் அகக்கண்கள் திறக்கப்படவும் நாம் அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருக்க அழைக்கப்படுகிறோம்.

## 3. இருளிலிருந்து ஒளிக்கு நேராக:-

இருளிலிருப்போர் பெரிய ஒளியைக் காண்பார்கள். அவர்கள் எழும்பி பிரகாசிப்பார்கள். ஏசாயா 60:1-ன் படி இறைவனின் மகிமைக்குரிய பாத்திரங்களாகக் செயல்படுவார்கள். இவர்கள் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலைப்பெற்று வாழ்வின் ஒளியை அடைந்திருப்பார்கள். அவர்கள் கிறிஸ்துவின் ஜீவனால் வாழ்வில் ஒளியேற்றப்பட்டவர்கள் (யோ. 8:12). இவர்கள் இயேசு கிறிஸ்துவால் பிரகாசிக்கப்பட்ட மெய் சீடர்கள் (யோவான் 1:4). இவர்கள் இயேசு கிறிஸ்துவால் ஒளியூட்டப்பட்டவர்கள். அந்தகாரத்தினின்று ஒளிக்கு நேராய் அழைக்கப்பட்டவர்கள் (1பேதுரு 2:9). இருளிலிருந்து ஒளிக்கு

நேராய் வந்தவர்கள் இறைசித்தத்தை நிறைவுசெய்ய முன்வருவார்கள். இவர்கள் இறைவனின் பிள்ளைகள் என்ற மெய் உரிமைக்கு உரியவர்கள்.

எனவே எபேசியர் 5:8-ல் பவுல் அடிகளார் “வெளிச்சத்தின் பிள்ளைகளாய் அழைக்கப்பட்டவர்கள்” எனக் கூறுகிறார். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ்வு நடத்த உண்மை எதுவோ, நல்லவை எதுவோ, நீதி நியாயம் எதுவோ அவற்றை கடைப்பிடித்து பிறரைத் தாங்கள் பெற்ற மெய் அனுபவத்திற்கு நேராய் வழிநடத்தும் செம்மல்களாக விளங்குபவர்கள். இவர்கள் கிறிஸ்துவாகிய ஒளியினால் இருளிலிருந்து ஒளிக்கு நேராய் அழைக்கப்பட்டவர்கள். இவ்வாறு கிறிஸ்துவினால் ஏற்பட்ட தீபம் எரிந்து பிரகாசிக்கவும், பலர் கிறிஸ்துவின் அன்பில் வரவும், வளரவும் தம்மையே அர்ப்பணித்து செயல்படுவோமாக.

- **V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 87

### ஜுலை 2020 மாத கேள்விகள்

### (சங்கீதம் 140 - 150 வரை)

1. எது இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது?
2. கர்த்தருக்கு முன்பாகத் தூபமாக இருக்கக்கடவது எது?
3. பூமிக்கும் வானத்திற்கும் மேலானது எது?
4. யார் சித்திரந்தீர்த்த அரமனை மூலைக்கற்களைப்போல் இருப்பார்கள்?
5. மகா தீவிரமாய் செல்லுகிறது எது?
6. கண்ணியை மறைவாய் வைக்கிறவர்கள் யார்?
7. தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம் பண்ணுகிறவர் யார்?
8. நீதிமான்கள் எப்போது என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்?
9. கர்த்தர் யாரை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்?
10. மடங்கடிக்கப்பட்டவர்களை தூக்கிவிடுகிறவர் யார்?
11. பூமியிலே யார் நிலைப்பதில்லை?
12. இருபுறமும் கருக்குள்ள பட்டயம் யாருடைய கையில் இருக்கும்?
13. பாதாளவாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது எது?

14. கர்த்தர் தம்மில் அன்புகூருகிறவர்களை என்ன செய்வார்?
15. மரித்தவர்கள்போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறவன் யார்?
16. கர்த்தர் யாருடைய வழியைக் கவிழ்த்துப்போடுகிறார்?
17. மாயைக்கு ஒப்பாயிருக்கிறவன் யார்?
18. கர்த்தர் எதை துணிக்கைகளாக அனுப்புகிறார்?
19. வறண்ட நிலத்தைப்போல் கர்த்தர்மேல் தாகமாயிருக்கிறது எது?
20. கர்த்தர் எதன் இலக்கத்தை எண்ணி பேரிட்டு அழைக்கிறார்?

## ஜூன் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. வால வயதின் குமாரர் - சங். 127:5
2. பூமியின் கடையாந்தரங்களில் - சங். 135:7
3. நம்முடைய சகாயம் - சங். 124:8
4. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் - சங். 126:5
5. சீயோனை – சங். 132:13
6. துன்மார்க்கனை – சங். 139:19
7. மேட்டிமையானவனையோ – சங். 138:6
8. ஆகாமியத்தின் கொடுங்கோல் - சங். 125:3
9. என் ஆத்துமாவை – சங். 131:2
10. ஜாமக்காரர் - சங். 130:6
11. நம்முடைய ஆத்துமா – சங். 124:7
12. அருமையானவைகள் - சங். 139:17
13. தங்கள் கோணலான வழிகளுக்கு சாய்கிறவர்களை – சங். 125:5
14. கர்த்தாவே உம்முடைய பிரஸ்தாபம் - சங். 135:13
15. இஸ்ரவேலை – சங். 135:4
16. உன் பிள்ளைகள் - சங். 128:3
17. தூரத்திலிருந்து – சங். 139:2
18. பனி – சங். 133:3
19. கர்ப்பத்தின் கனி – சங். 127:4
20. அலரிச்செடிகளின்மேல் - சங். 137:2

## ஜுன் 2020 மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Jeya Rani Victor | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Ancy Daniel | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Ashika Joel | Mrs. Juslin Jaslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Thamari Johnson |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Regin Justa Vinolin | |

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 72

### ஜுலை 2020 மாத கேள்விகள்

### (யோபு 21 முதல் 31 வரை)

1. முத்துக்களைப் பார்க்கிலும் விலை உயர்ந்தது எது?
2. அதிகாலமே இரைதேட போகும் விலங்கு எது?
3. சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரம் எது?
4. யார் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்?
5. ஆட்டுமயிர்க் கம்பளியினாலே என்ன கிடைக்கும்?
6. கர்த்தர் வாயினின்று பிறந்தது எது?
7. யோபுக்கு உடுப்பாயிருந்தது எது?
8. எப்பொழுது நான் பொன்னாக விளங்குவேன்?
9. தேவன் தந்த ஆவி என்னில் எங்கு இருக்கும்?
10. கர்த்தர் வானத்தை எதனால் அலங்கரித்தார்?
11. அக்கிரமச் செய்கைகாரருக்கு கிடைப்பது எது?
12. தேவன் துன்மார்க்கருடைய அக்கிரமத்தை யாருக்கு வைத்து வைக்கிறார்?
13. வாற்கோதுமைக்குப் பதிலாக முளைப்பது எது?

14. புழுவாகவும், பூச்சியாகவும் இருக்கிறது யார்?
15. காலம் வருமுன்னே வாடிப்போனவர்கள் யார்?
16. நான் உயிரோடிருக்குமளவும் என்னை நிந்திக்காதது எது?
17. வறட்சியும், உஷ்ணமும் எதை பட்சிக்கும்?
18. கற்களில் இருந்து உருக்கி எடுக்கப்படுவது எது?
19. கார்மேகங்களில் கட்டி வைக்கப்படுவது எது?
20. எதை விட்டு விலகுவதே புத்தி?

## ஜூன் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கன்மலை – யோபு 18:4
2. ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் - யோபு 14:1
3. புத்தியில்லாத மனுஷன் - யோபு 11:12
4. உன்னதங்களில் - யோபு 16:19
5. மீட்பர் - யோபு 19:25
6. சாகிறவன் சுவாசம்போல் - யோபு 11:20
7. மாயையே – யோபு 15:31
8. மாயக்காரனின் சந்தோஷம் - யோபு 20:4
9. செவி – யோபு 12:11
10. கந்தகம் - யோபு 18:15
11. சுத்தமானதை – யோபு 14:4
12. மேட்டிமைகள் - யோபு 13:12
13. கண்கள் பூத்துப்போகும் - யோபு 17:5
14. பலவந்தம் பண்ணுகிறவனுக்கு – யோபு 15:20
15. ஆபத்துக்குள்ளானவன் - யோபு 12:5
16. மூர்க்கம் - யோபு 19:29
17. மீறுதல் - யோபு 14:17
18. இருளில் - யோபு 17:13
19. பரிதானம் வாங்கினவர்களின் - யோபு 15:34
20. ஞானிகள் - யோபு 15:18

## ஜூன் 2020 மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jaslin Sundara Kumar | Mr. Lenin Raj |
| Mr. Anand | Mr. Jean C. R. Shibin | Mr. Prince J. P. |
| Mr. Anshio Shajin | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Anu | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Austin Daniel Raj | Mr. Justus Martin | Mr. Robin Devadhas |
| Mr. Bejo Nelson | Mr. Kanagavel | Mr. Sujith Gladson |
| Mr. Daniel Raj P. | | |

*May God Bless All*

## Birthday Celebrants – July 2020

| | |
|---|---|
| 01st July | Mr. Alex Baskar |
| 01st July | Miss. Dejina Januel, D/o Mr. Sujin Issac Samuel |
| 02nd July | Mr. C. D. Robin Raj |
| 03rd July | Miss. Meghna Bino, D/o Mr. Bino Vetharaja Singh |
| 04th July | Mrs. Saja, W/o Mr. Arun Paul |
| 05th July | Mr. Jesiel Edward, S/o Mr. Micheal |
| 05th July | Mrs. Shiny Vasila, W/o Mr. Prem Meshach |
| 06th July | Miss. Shana Melanie, D/o Mr. Mohan Babu |
| 07th July | Miss. Gabinna Nissi, D/o Mr. Prem Vijins |
| 11th July | Mrs. Deena, W/o Mr. Sujin Issac Samuel |
| 11th July | Mr. Lenin Raj |
| 13th July | Mrs. Nisha, W/o Mr. Broosewelt |
| 13th July | Mrs. T. Pavithra, W/o Mr. D. Ahigen Paul |
| 16th July | Mr. John Jacob |
| 17th July | Miss. Jovina, D/o Mr. Victor Thaya Singh |
| 18th July | Miss. Dafrena Leah, D/o Mr. C. Sujin |
| 19th July | Mr. Kasiraja |
| 19th July | Mrs. Jeny Sharlin, W/o Mr. Livingston |
| 20th July | Master. Evan B. Moses, S/o Mr. Benny Moses |

| | |
|---|---|
| 20th July | Mr. G. Devaraj |
| 21st July | Miss. Jerlin Stelina, D/o Mr. Justus Martin |
| 24th July | Mrs. C. B. Josepin Jeba Sharmy, W/o Mr. Anto Kingston |
| 24th July | Master. Nikhil Broose, S/o Mr. Broosewelt |
| 25th July | Mrs. Golden Irene Sheeja, W/o Mr. Robin Devadhas |
| 25th July | Mr. Jebister, S/o Mr. John Jacob |
| 25th July | Mrs. Shiney, W/o Mr. Johan Pratheep |
| 26th July | Mr. P. Suresh |
| 26th July | Mrs. Mahizha, W/o Mr. Jenkin Raj |
| 30st July | Mr. S. Jones |

## Wedding Day Anniversaries – July 2020

| | |
|---|---|
| 11th July | Mr. Michael & Mrs. Enolia |
| 12th July | Mr. Edward Sam & Mrs. Sheeba |
| 15th July | Mr. Robin Raj & Mrs. Rabboni |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.

- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு

அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. 210-க்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் பாதுகாக்கப்படவும்.....
10. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....
11. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....


**இணைந்து மன்றாடுவோம்!** **இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – ஜுலை 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுலை 1 | புதன் | பிலிப். 3:7-11 | பிலிப். 3:7 | சங். 146-150 |
| ஜுலை 2 | வியாழன் | லூக்கா 14:25-27 | லூக்கா 14-27 | நீதி. 1-3 |
| **ஜுலை 3** | **வெள்ளி** | **அப். 7:54-60** | **அப். 7:56** | **நீதி 4-6** |
| ஜுலை 4 | சனி | மத்தேயு 5:43-48 | மத்தேயு 5:48 | நீதி 7-9 |
| ஜுலை 5 | ஞாயிறு | மத்தேயு 25:14-30 | மத்தேயு 25:29 | நீதி 10-12 |
| ஜுலை 6 | திங்கள் | ஆதி. 2:4-15 | ஆதி. 2:15 | நீதி. 13-15 |
| ஜுலை 7 | செவ்வாய் | ஆதி. 39:2-6 | ஆதி. 39:5 | நீதி. 16-19 |
| ஜுலை 8 | புதன் | லூக்கா 10:25-37 | லூக்கா 10:37 | நீதி. 20-22 |
| ஜுலை 9 | வியாழன் | லூக்கா 17:11-19 | லூக்கா 17:19 | நீதி. 23-25 |
| **ஜுலை 10** | **வெள்ளி** | **2கொரி. 8:8-15** | **2கொரி. 8:9** | **நீதி. 26-31** |
| ஜுலை 11 | சனி | 1யோவான் 4:7-12 | 1யோவா. 4:7 | பிரசங்கி 1-4 |
| ஜுலை 12 | ஞாயிறு | லூக்கா 9:10-17 | லூக். 9:13(a) | பிரசங்கி 5:9 |
| ஜுலை 13 | திங்கள் | 1கொரி. 12:27-31 | 1கொரி. 12:31 | பிரசங்கி 10-11 |
| ஜுலை 14 | செவ்வாய் | யூதா 17-23 | யூதா 20 | உன்னத. 1-4 |
| ஜுலை 15 | புதன் | லூக்கா 17:5-10 | லூக்கா 17:5 | உன்னத. 5-8 |
| ஜுலை 16 | வியாழன் | தீத்து 2:9-15 | தீத்து 2:14 | ஏசாயா 1-3 |
| **ஜுலை 17** | **வெள்ளி** | **ரோமர் 12:9-21** | **ரோமர் 12:21** | **ஏசாயா 4-10** |
| ஜுலை 18 | சனி | 1இரா. 3:7-15 | 1இரா. 3:11 | ஏசாயா 11-14 |
| ஜுலை 19 | ஞாயிறு | 2கொரி. 5:11-21 | 2கொரி. 5:20 | ஏசாயா 15-19 |
| ஜுலை 20 | திங்கள் | எபேசி. 6:10-20 | எபேசி. 6:20 | ஏசாயா 20-24 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுலை 21 | செவ்வாய் | மத்தேயு 5:1-12 | மத்தேயு 5:9 | ஏசாயா 25-28 |
| ஜுலை 22 | புதன் | மத்தேயு 5:13-20 | மத்தேயு 5:16 | ஏசாயா 29:31 |
| ஜுலை 23 | வியாழன் | சங். 106:1-12 | சங். 106:3 | ஏசாயா 32-35 |
| **ஜுலை 24** | **வெள்ளி** | **எபிரெ. 11:1-11** | **எபிரெ. 11:1,2** | **ஏசாயா 36-37** |
| ஜுலை 25 | சனி | மத்தேயு 7:13-23 | மத்தேயு 7:21 | ஏசாயா 38-40 |
| ஜுலை 26 | ஞாயிறு | யோவான் 11:15-19 | யோவா. 11:15 | ஏசாயா 41-43 |
| ஜுலை 27 | திங்கள் | மத்தேயு 21:12-17 | மத்தேயு 21:13 | ஏசாயா 44-47 |
| ஜுலை 28 | செவ்வாய் | லூக்கா 15:11-24 | லூக். 15:18,19 | ஏசாயா 48-51 |
| ஜுலை 29 | புதன் | லூக்கா 19:1-10 | லூக்கா 19:8 | ஏசாயா 52-55 |
| ஜுலை 30 | வியாழன் | சங். 139:17-24 | சங். 139:24 | ஏசாயா 56-58 |
| ஜுலை 31 | **வெள்ளி** | 2இரா. 5:1-5 | 2இரா. 5:14 | ஏசாயா 59-64 |
| ஆகஸ்ட் 1 | சனி | மத்தேயு 7:13-23 | மத்தேயு 7:21 | ஏசாயா 65-66 |
| ஜுலை 1 | புதன் | பிலிப். 3:7-11 | பிலிப். 3:7 | சங். 146-150 |



# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**